www.tamilarangam.net

# அரசியல் அனாதைகளின் ஜனநாயகப் படுகொலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு மரண / மனித அழைப்பு

T. விமலேஸ்வரன்

யாழ் / பல்கலைக்கழகம்

பிறப்பு : 1963.
படுகொலை : 18-07-1988.

நான் கொல்லப்பட்டேன்.
முன்னர் எனது நண்பர்கள் பலரும்
கொல்லப்பட்டது போல !
இன்று நான் கொல்லப்பட்டேன் ;
ஏனெனில் ஆக்கிரமிக்கப்பட்ட எனது தேசத்தையும்
எனது மக்களையும் நேசித்ததற்காக !

விடுதலை பேசிய விரல்களே விசையை அழுத்தின.
இன்று நான் கொல்லப்பட்டேன் !

இனியும் இது தொடரா தென்பதற்கில்லை ;
எனது மரணத்தின் பெயரால் உங்களிடம் கேட்படுதல்லாம்
ஒரு மரண ஊர்வலமும் மலர் வளையமும்
சில துளி கண்ணீருமல்ல !
எனது கல்லறை மீது
மானுடத்தை நேசிக்கும்
மனிதர்களின் ஐக்கியமே !

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






www.tamilarangam.net

# ஒரு மனிதனும் புலியும்

மக்களின் உணர்வலைகளும் அதிகாரவர்க்கத்தின் அரசியல் தேவைகளும் தேசப்படத்தை வெட்டித் திருத்திக் கொண்டிருக்கின்ற நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்! இருப்பிலுள்ள பொருளாதாரச் சூழ்நிலை மக்களின் சமூகத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் உலகம், போராட்டங்களையும் புரட்சிகளையும் சந்தித்துக் கொண்டிருக்கிறது. உலகத்தின் இந்த மூலதனதச் சங்கிலியைத் தொடர்ந்து காப்பாற்றிக் கொள்ள தன்னுடைய அனைத்துப் பலத்தையும் ஏகாதிபத்தியங்கள் மக்கள் மீது இறுக்கிக் கொண்டு வருகிறது. தேசங்களில் எழுகின்ற போராட்டங்களை அடக்குவதற்கும் அறிவு ஜீவிகளையும் தேசப்பற்றுள்ளவர்களையும் கொன்றழிக்கவும் மௌனிகளாக்கவும், மேலும் மேலும் புதிய வழிமுறைகளை ஆதிக்க சக்திகளும் அதன் சித்தாந்த கர்த்தாக்களும் நாளாந்தம் உருவாக்கி கொண்டும் செயல்படுத்தி கொண்டும் இருக்கிறார்கள்.

"மனித உறவுகள் கோட்பாடு" என்ற சித்தாந்த ரீதியான அதிகாரவர்க்க ஆயுதம் மனிதனை மனிதன் எப்படி அடக்கி ஆள்வது என்பதை வெட்கமின்றி விளக்கமளித்த நாளில் இருந்து இன்றைக்கு வரைக்கும், ஆதிக்க சக்திகள் அடக்குமுறையின் புதிய வடிவங்களை அறிமுகப்படுத்தி வருகின்றன. குறிப்பாக எமது தேசம் போன்ற மூன்றாம் உலக நாடுகளில் போராட்டங்களையும், புரட்சிகளையும் அடக்கியாள வழிமுறைகளை வகுத்திருக்கின்றன.

"மனித உறவுகள் கோட்பாடு" என்று அழைக்கப்படுகின்ற தொழில் முறை உறவுவுகளைப் பேணுவதன் மூலம் போராட்டங்களையும் புரட்சிக்கான சூழலையும் நிர்மூல மாக்குவதற்கான சித்தாந்தத்தை உருவாக்கிக் கொண்ட பின்னர், அதிகார வர்க்கம் பல புதிய பிரச்சனைகளை சந்தித்து வந்தது. குறிப்பாக கீழைத்தேசச் சந்தையில் தனது மூலதன ஆதிக்கத்தை தொடர்ந்து நிலைநிறுத்துவது தொடர்பான பல பிரச்சனைகளை முகம் கொண்டது. இதற்கு மிகப்பெரிய தடையாக தேசங்களின் தேச விடுதலைப் போராட்டங்கள் அமைந்தன. இந்நிலையில் புதிய சுரண்டல் அமைப்பு முறைக்கான நவகாலனித்துவ அமைப்பு முறையை அறிமுகப்படுத்தி தனக்கு விசுவாசமான ஒரு வர்க்கத்தை அந்த நாடுகளில் ஏற்ப்படுத்திக் கொண்டது. ஆனால் வரலாற்றின் முன்னோக்கிய கழற்சிப் போக்கில் இந்த புதிய காலனி அமைப்பு முறையும் ஆட்டம் காணத் தொடங்கி தேச விடுதலைப் போராட்டங்கள் உருவாகத் தொடங்கின. தெலுங்கானா, நிக்கரகுவா, பிலிப்பைனஸ் போன்ற நாடுகளில் உணர்ச்சி பூர்வமான மக்களின் கொந்தளிப்பை ஏகாதிபத்தியங்கள் சந்தித்தன! இதற்குப் பிறகு இந்த உணர்வலைகளையும் மக்களின் தேசப்பற்றையும் ஏகாதிபத்தியங்கள், தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி கொண்டன. இந்திய தேசம் 'நாட்டுப் பற்று' என்று கோஷத்தின் கீழ் கட்டிக்காக்கப்படுகிறது. இலங்கை சமூக மாற்றத்திற்கான போராட்டம் பேரினவாதத்தால் திசைதிருப்பப்பட்டது. இவற்றின் மூலம் புதிய அனுபவங்களைக் கண்ட ஏகாதிபத்தியம், போராட்டங்களை அழித்தொழிக்க புதிய வழிமுறைகளைக் கையாளத் தொடங்கியது! அந்த புதிய வழிமுறையின் மிகவும் நேரிடையான ஒரு விளைவு தான் LTTE என்கிற சமூகப் பாசிச அமைப்பு!

ஏகாதிபத்தியங்களின் புதிய நவகாலனித்துவ சுரண்டல் அமைப்பு முறையில் தவிர்க்க முடியாதவாறு எழுகின்ற போராட்டச் சூழலை அதிகாரவர்க்கம் தானே பயன் படுத்திக் கொள்ள் ஆரம்பித்தது. போராட்டத்திற்கான சூழல் கனிந்துள்ள போது மக்களின் உணர்வுக்கொந்தளிப்பிற்கான வடிகாலைத் தானே ஏற்படுத்தி கொடுத்து, விடுதலை இயக்கங்களையும் ஆயுதக் குழுக் களையும் தானே உருவாக்கிக் கொடுத்து அவற்றை தனது நேரடியான கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்கிறது. இதனால் சரியான போராட்டம் ஒன்றும் அதனூடான சமூகமாற்றம் ஒன்றும் ஏற்படாதவாறு தடைப்படுத்திக கொள்கிறது. மூன்றாம் உலக நாடுகளில் இவ்வாறான, தேசவிடுதலை அமைப்புகளின் உருவாக்கத்தினூடாக அங்கே ஆதிக்கத்திலுள்ள சமூகசக்தியான தரகு முதலாளித் துவத்திற்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் இடையிலான ஒரு முரண்பாடு உருவாகிறது. இந்த முரண்பாடானது பகை முரண்பாடாக இருப்பதில்லை! இந்த முரண்பாட்டின் தாக்கமானது ஏகாதிபத்தியம் சார்ந்து போராடுகின்ற சக்தியான தரகு முதலாளித்துவ சக்திக்கும் ஆதிக்கத்திலுள்ள தரகு முதலாளித்துவத்திற்கும் இடையிலான தரகு முதலாளித்துவ உள்முரண்பாடாக

www.tamilarangam.net

வெளிப்படுகிறது. இதனால் பிழையான, தரகு முதலாளித்துவ இருப்பை நிலைப்படுத்த கூடிய அந்தப் போராட்டம் தொடர்ந்து பேணப்படுகிறது. இந்தத் தத்துவத்தின் அடிப்படையிலேயே LTTE இற்கும் சிறீ லங்கா அரசுக்கும் இடையிலான இந்தப் போராட்டத்தின் தொடர் இருப்பு சாத்தியமாகிறது.

ஆரம்பக்கட்டங்களில் திசையற்ற மத்தியதரவர்க கத்தின் பிரதிநிதிகளாக இருந்த LTTE, EPRLF, PLOT, EROS, TELO போன்ற இயக்கங்களை ஏகாதிபத்தியங்கள், போராட்டச் சூழல் கனிந்து வந்த போது பயன்படுத்திக் கொள்ள ஆரம்பித்தன. EPRLF, TELO, PLOT, EROS போன்றவற்றை பிராந்திய வல்லரசான இந்தியாவும், LTTEயை அமெரிக்க ஏகாதிபத்தியமும் பயன்படுத்த ஆரம்பித்தன. LTTEஇற்கும் சிறீ லங்கா அரசுக்கும் இடையிலான முரண்பாடு தரகு முதலாளித்துவ உள்முரண்பாடாக தவிர்க்க முடியாமல் கூர்மை அடைந்தது! ஆனால் இந்த முரண்பாடு எப்போதும் சமரசத்திற்கு உட்படக்கூடிய வகையிலான முரண்பாடாகவே இன்றைக்கு வரை இருந்து வருகிறது. IPKF இலங்கையில் இருந்தபோதும், அதற்கு முற்பட்ட சில கால கட்டங்களினதும் குறிப்பான இந்த சமரசத் தன்மைகளை காணக் கூடியதாக உள்ளது. LTTEயை தேசிய சக்திகள் என்று கூறுகின்ற "சமரன்" (மக்கள் யுத்தம்) போன்ற வெளியீடுகள் கூட இந்த சமரசத்திற்கான வாய்ப்பு நிலையை என்றும் மறுக்கவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்தப் போராட்டத்தில் தரகு முதலாளித்துவ சக்திகள், எந்த அளவிற்கு ஏகாதிபத்தியத்தின் பக்கம் சார்ந்து நிற்கின்றன என்பது குறித்து, அளவில் வித்தியாசங்கள் இருப்பினும் இந்தச் சார்பு நிலை மறுக்கப்பட முடியாததாகின்றது. மேலும் LTTE ஆனது ஏகாதிபத் தியங்களுடன் சார்ந்து சிறீ லங்கா அரசிற்கு எதிராகப் போர்தொடுக்கும் போது ஏகாதிபத்தியத்திற்கும் சிறீ லங்கா அரசிற்கும் ஒரு முரண்பாடு தோன்றுகிறது. இம் முரண்பாடானது அடிப்படையில் நேச முரண்பாடாகவே அமைகிறது. மேலும் அரசு தன்னை ஏகாதிபத்தியத்தின் பக்கம் இறுக்கிக் கொள்ளவும் LTTEக்கு எதிராக மேலும் தீவிரமாகப் போராடவும் வழிவகுக்கிறது. இதனால் அரசின் ஏகாதிபத்திய சார்பு நிலையும் LTTE, சிறீ லங்கா போராட்டமும் தொடர்ந்து பேணப்படுகிறது. மொசாட் என்ற பலம் வாயந்த ஏகாதிபத்திய உளவுப்படையிலிருந்து LTTE, சிறீ லங்கா அரசு ஆகியன பெற்றுக் கொண்ட உதவிகள் இதனை மிகவும் அப்பட்டமாக நிருபிக்கின்றன. இவ்வாறான மொசாட்டின் உதவிகளை வெறுமனே ஆயுத விற்பனையாகப் பார்க்க முடியாது. ஒரு தேசிய சக்திக்கு ஏகாதிபத்தியம் ஆயுதங்களை விற்பதனால் அதுவே இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய அதிசயமாகும்.

எமது தேச விடுதலைப் போராட்டத்தை அடக்கும் பணியினை மிகவும் கச்சிதமாகவே LTTEயும், சிறீ லங்கா அரசும் செய்து முடிக்கின்றன. பல உண்மையான தேசிய சக்திகளின் சாம்பல் மேடுகளால் எமது தேசம் நிரப்பப்பட்டுள்ளது. சுந்தரம், மனோமாஸ்டர். சந்ததியார் என்று ஆரம்பித்த பட்டியல் இன்று ஆயிரக்கணக்கான உண்மையான, உணர்வு பூர்வமான போராளிகளைப் பலிகொண்டிருக்கிறது பல அறிவு ஜீவிகளையும் தேசபக்த சக்திகளையும் இருந்த இடம் தெரியாமல் அழித்துப் போட்டிருக்கிறது. ராஜினி இறந்து போனாள். விமலேஸ்வரன் கொல்லப்பட்டான். அண்மையில் தர்மலிங்கம் என்ற தேசப்பற்றுள்ள போராளி இல்லாமல் போனான். விசுவானந்த தேவர், ரமணி, கேசவன், மீரா, இரண்டு யாழ்பல்கலைக்கழக மாணவர்கள்...................

இப்படியே இந்த வரிசை நீண்டு கொண்டு போகிறது.

விமலேஸ்வரன் இறந்து போவதற்கு ஒரு கணம் முன்னர் கூட அவன் எந்த இயக்கத்தின் மீதும் தனிப்பட்ட ஆத்திரம் கொண்டிருக்கவில்லை. அவனுக்கு LTTE என்ற பெயரில் வெறுப்பிருந்ததில்லை. சில வேளைகளில் LTTE தான் இந்த தேசத்தின் விடுதலையை தீர்மானிக்கும் அமைப்பானால் அதனுடன் இணைந்து போராடியிருப்பான். நம் தேசத்தின் அரசியல் வியாபாரிகளுக்கும் பிழைப்பு வாதிகளுக்கும் மத்தியில் அவன் ஒரு மனிதன்!

அவனது அரசியல் வாழ்வின் ஆரம்ப கட்டங்களில் 83ம் ஆண்டு தேசிய அலையில் உந்தப்பட்டு PLOT அமைப்பில் இணைந்து கொண்டான்! அவ்வமைப்பின் மாணவர் பிரிவான TESO இல் இணைந்து முழுநேரப் போராளியாக உழைத்தான். அந்த அமைப்பின் அடாவடித்தனங்களையும் உட்கட்சிக் கொலைகளையும் ஆக்ரோஷமாக எதிர் கொண்டான்! இறுதியில் அவ்வமைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டான்! சிறீலங்கா அரசின் இராணுவ ஆக்கிரமிப்புக்கும், அடக்குமுறைக்கும் எதிராக தேசத்தை விசுவாசித்து எழுந்த ஆயிரக்கணக்கான மக்களுள் ஒருவனாக தேச விடுதலை இயக்கத்தில் இணைந்து கொண்ட அவன் மக்களை நேசித்த ஒரே காரணத்தால் அதிலிருந்து வெளியேறிவிட்டான்.

அதன் பிறகு யாழப்பாணப் பல்கலைக்கழகத்தில் மீண்டும் தனது கல்வியைத் தொடர ஆரம்பித்தான். இச்சந்தர்ப்பத்தில் கிளிநொச்சிப் பகுதிகளில் குடியேறிய

www.tamilarangam.net

மலையக மக்களுக்கு சேவைச் செய்யவென பல்கலைக் கழகத்திலிருந்து சென்ற குழுவுடன் இணைந்து கொண்டு கிளிநொச்சிப் பகுதிகளில் மலையக மக்களுக்கான சேவையில் முழுமையான பங்காற்றினான்

1986 இறுதியில் யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் நடவடிக்கைகளில் LTTEஇனர் அத்து மீறித்தலையிட்டதைத் தொடர்ந்து LTTEஇற்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது ! இந்நிலையில் LTTEஇனரின் ஜனநாயக மறுப்புக்கு எதிரான மாணவர்களின் கொந்தளிப்பினை அப்போதைய மாணவர்களின் சந்தர்ப்பவாதத் தலைமை தலைமைதாங்க மறுத்து LTTE சார்பான நிலை எடுத்தது. உணர்ச்சி வசப்பட்ட நிலையில் மாணவர்கள் திசையற்றுப் போராட முற்பட்ட போது அந்தப்போராட்டத்தை சரியான வழியில் நெறிப்படுத்தினான்! மாணவர்களின் ஏகோபித்த ஆதரவுபெற்ற தனித் தலைவனான். ஆம்! அவன் இருந்திராவிட்டால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சிலவேளை இழுத்து மூடப்பட்டிருக்கும்! இந்த சந்தர்ப்பத்தில் அவனது உறுதி மிக்க சரியான முடிபுகள். ஒரு தேசத்தின் உண்மையான தலைவனுக்குரிய தேசியப் பண்பினை உணர்த்தி நின்றது!

LTTEஇல் இணைந்திருந்த பல மாணவர்களைக்கூட இந்தப் போராட்டத்தின் நியாயத்தன்மை ஜனநாயகத்தின் அவசித்தை உணரவைத்தது. தலைமைக்குழுவில் கூட பல LTTE மாணவர்கள் இணைந்து கொண்டனர். அனுபவமுள்ள ஓர் அரசியல் தலைவனுக்குரிய பண்புடன் மாணவர்களை வழி நடத்தினான், விமல் ! இந்தப் போராட்டம் நடந்து கொண்டிருந்த வேளையில் இரவோடு இரவாக விஜிதரன் என்ற மாணவன் கடத்தப்பட்டான்.

TELO தவிர ஏனைய இயக்கங்கள் அதிகாரம் செலுத்திக் கொண்டிருந்த ஒரு கால கட்டம் அது ! எமது தேசத்தின் விடுதலைக்கான போராட்டத்தில் சிறுமுதலாளித்துவ-ஏகாதிபத்திய சார்பு அமைப்புக்கள் யாழ்ப்பாணத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள விடுதலைப் பிரதேசமாகப் பிரகடனப் படுத்தியிருந்த , ஆயுதக் கலாச்சாரத்தை நிலை நாட்டிக் கொண்டிருந்த வேளை அது !

இந்த மாணவன் கடத்தப்பட்டதும் யாழ் பல்கலைக் கழகம் ஆர்ப்பரித்தது ! உணர்ச்சிக் கொந்தழிப்பில் மாணவர்கள் அரசின் ஒடுக்கு முறையைக் கூட மறந்து போன நிலையில், இயக்கங்களின் அராஜகங்களுக்கு எதிராகக் கோஷமெழுப்பினர். இந்த நிலையில், பல்கலைக் கழகத்தில் எழுந்த போராட்டத்தை சரியான திசை வழியில் நடத்திச் சென்றான் விமல்.

இந்தப் போராட்டம் பல்கலைக் கழக மாணவர்களின் உரிமைக்கான போராட்டம் என்ற நிலையில் இருந்து, முழு மாணவர்களுக்குமான, முழு மக்களுக்குமான அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் வென்றெடுப்பதற்கான போராட்டம் என்ற பரிணாமத்தைப் பெற்றது ! இந்த அமைதிப் போராட்டத்தின் ஒருகட்டத்தில் விஜிதரனை விடுதலை செய்யக் கோரியும், சில அடிப்படை ஜனநாயக உரிமைகளைக் கோரியும் இயக்கங்களின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக மாணவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து, சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானித்தனர். இவைதான் அந்தக் கோரிக்கைகள். பின்வருமாறு :

1. கடத்திச்செல்லப்பட்ட எங்கள் மாணவன் விஜிதரன் எந்தவித நிபந்தனையும் இன்றி விடுதலை செய்யப்பட்ட வேண்டும்.
2. மருத்துவ பீட மாணவன் கேசவன் தாக்கப்பட்டமைக்கான காரணத்தைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.
3. அரசியல் காரணங்கள் என்ற போர்வையில் மாணவர்கள் தாக்கப்படுதல் நிறுத்தப்பட வேண்டும்.
4. பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள், விரிவுரையாளர்கள் தொடர்பான எந்தப் பிரச்சனையும் நிர்வாகத்தினூடாகவே அணுகப்படவேண்டும்
5. எமது போராட்ட உச்சக்கட்டமான சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை எவரும் இடையில் குழப்பக்கூடாது.

இந்தக் கோரிக்கைகளை LTTE (தேசிய சக்திகள்?) தவிர்ந்த ஏனைய எல்லா விடுதலை இயக்கங்களும் ஏற்றுக் கொண்டன ! ஒரு மாணவன் படிப்பதற்காக, போராடிய போது அதற்கான கோரிக்கைகளையே ஏற்றுக் கொள்ள மறுத்தது புலி ! இது தவிர ஆங்காங்கே நடந்த போராட்டங்கள் மீது நேரடியாகவும், குண்டர்களையும் ஏவி தனது வெறியாட்டத்தை நடத்தியது புலி ! ரணசிங்க பிரேமதாசாவின் குண்டர் கலாச்சாரம் தமிழீழத்தில் புலிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டது !

மாணவர்களால் இந்தக் கோரிக்கைகள்முன்வைக்கப் பட்டு, சாகும் வரை உண்ணாவிரதம் ஆரமபிக்கப்பட்டது ! இந்தப் போராட்டத்தில் பங்கு கொண்ட ஆறு மாணவர்களுடன் விமலேஸ்வரனும் ஒருவனாகினான். ஒரு அதிகாரி போன்ற தலைவனாக இல்லாமல் மாணவர்களுடனான மாணவர்களின் தலைவனாக இருந்தான்.

இது தவிர வெகுஜன அமைப்புகள்.

1. மக்களுக்கு எழுத்து , பேச்சு , கருத்து , பத்திரிகைச்

www.tamilarangam.net

சுதந்திரம் வேண்டும்.

2. மக்களுக்கு விரும்பிய அரசியல் ஸ்தாபனங்களில் இருக்கவோ அரசியல் நடத்தவோ சுதந்திரம் வேண்டும்.

என்ற இரு கோரிக்கைகளை முன்வைத்து மாணவர் களுடன் இணைந்து போராடினார்கள் இந்தக் கோரிக்கைகள் தம்மை "அரசியல் அநாதைகள்" ஆக்கிவிடும் என LTTE இனர் குறிப்பிட்டனர். அதனால் இக்கோரிக்கைகளை அங்கீகரிக்க மறுத்தனர்.

இக்கோரிக்கைகளுக்காக சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கத் துணிந்த 7 மாணவர்களுள் விமலேஸ்வரனும் ஒருவனாக போர்க்களத்துள் குதித்தான். பல மாணவர்கள் தடுத்தார்கள் ! மாணவர்களை ஒழுங்குப்படுத்தி, போராட்டத்தை வெளியிலிருந்து கொண்டு நடத்த சரியான ஒரு தலைமையை இழந்து போய்விடுவோம் என்ற பயத்தினால் பலர் விமலேஸ்வரனை உண்ணாவிரதம் இருக்க விடவில்லை ! ஆனால், போராட்டத்துள் இல்லாத ஒரு தலைமை, சரியான தலைமை ஆகிவிட முடியாது , தியாகம் தலைமைக்கு உரிய முக்கிய பண்பு , என்று கூறி, உண்ணாவிரதக் களத்தி ல் குதித்தான் !

சாகும் வரை உண்ணாவிரதம் ஆரம்பமாகும் முன்னர், மாணவர்கள் நிறைந்த கூட்டத்தில் விமலேஸ்வரன் பேசும் போது, பல மாணவர்கள் கண்ணீர் விட்டு அழுதனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றிலேயே மிகவும் உணர்ச்சி மிகுந்த, சோக மயமான ஒரு முதல் போராட்டம் அதுவாகத்தான் இருக்க முடியும் !

இந்தப் போராட்டத்தில் சில வேளை நாங்கள் இறந்து போகலாம், அப்போது நாம் எதற்காகப் போராடினோமோ அதற்காக எமக்குப் பின்னால் பலர் வரப்போகிறார்கள் என்று விமலேஸ் கூறிமுடித்ததும், கூட்டம் நடந்த கைலாசபதி கலையரங்கம் அழுது கொண்டிருந்து !

போராட்டம் ஆரம்பமாகி பத்தவது நாளில் நடந்த ஊர்வலத்தில் விமலேஸ் உண்ணாவிரதக் கொட்டகையில் படுத்திருந்த படியே உரையாற்றினான் !

இதற்குப் பிறகு கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளாத LTTEஇற்கும் மாணவர்களுக்கும் இடையில் சமரசம் செய்து, உண்ணாவிரதத்தை நிறுத்த, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (U.T.A.) பாதிரிமார் ஆகியோரும் பல பிரமுகர்களும் முயன்றனர், பல தடவைகள் இப்போராட்டத்தில் நழுவல் போக்கைக் கடைப் பிடித்த EROS என்றகுட்டி முதலாளித்தவ இயக்கமும் சமரசத்திற்கு முயற்சித்தது ! ஆனால் விமலேஸ்வரனும் சக உண்ணாவிரதிகளும், மிக உறுதியாக நின்றனர் !

ஆனால் போராட்டம் ஈழப் பிரதேசமெங்கும் வியாபித்தது ! மக்களின் உணர்வலைகள், அராஜகத்தின் ஆணிவேரை அறுத்தெறிந்து ஈழப் போராட்டத்தை வலுக்கொள்ளச் செய்யுமளவுக்கு எழுச்சி கொண்டது ! பாடசாலைகள் தோறும் மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவாக போர்க்களத்தினுள் குதித்தனர். ஆயிரக்கணக்கில் மக்களும் மாணவர்களும் ஆக்கோஷத்துடன் எழுந்தனர் !

LTTEஇனர் இதற்கு முகம் கொடுக்க முடியாமல் திணறிப் போயினர் ! தமது ஊது குழல்கள் முலம் போலிப் பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்து விட்டனர் ! 8வது நாள் நடந்த பொதுக் கூட்டமொன்றில் LTTE சார்ந்த மாணவர்கள் உண்ணாவிரதம் நிறுத்தப்பட வேண்டும் என வலி யுறுத்தினர். நடுநிலை வகிக்கிறோம் எனக் கூறிக் கொண்ட பல பிரமுகர்கள் உண்ணாவிரதத்தின் மூலம் உயிர்களைப் பலி கொடுத்து விடப் போகிறீர்களே என நீலிக்கண்ணீர் வடித்தனர். இறுதியில் உண்ணாவிரதம் இருந்த நிலையிலேயே விமலேஸ்வரன் போராட்டத்தைத் தொடருங்கள், நாம் உறுதியோடு இருக்கிறோம் அராஜகம் செத்துப் போகும் போதே நாம் உயிர் பெறுவோம் என்று கூறியதைத் தொடர்ந்து உண்ணாவிரதம் தொடர்ந்தது !

மேலும் உறுதியுடன் மாணவர்களும் மக்களும் ஜனநாயகத்திற்கான இந்தப் போராட்டத்தோடு இணைந்து கொண்டனர்.

24 நாட்களாக சளைக்காமல், சமரசங்களுக்கும் விட்டுக் கொடுப்புகளுக்கும் அப்பால் சளைக்காமல் நடந்த தொடர்ச்சியான சாத்வீகப் போராட்டங்கள், உண்ணாவிரதப் போராட்டமாக வடிவெடுத்த 10வது நாளில், இடை நிறுத்தப்பட்டது !

போராட்டம, உத்வேகம் அடைந்திருந்த இந்த நிலையில் தாம் அரசியல் அகதிகள் ஆக்கப்பட்டுவிட்டுவிடுவோமோ என்ற பயத்தில் மேலும் சில விட்டுக் கொடுப்புகளைச் செய்தனர். LTTEஇன் ஊது குழல்களான U.T.A. ஊடாக மாணவர்களோடு பேசினர். போராட்டத்தில் முன்னணியில் நின்ற மாணவர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தரப்படும் எனவும், போராட்டத்தினை வேறு வழிகளில் தொடர அனுமதி வழங்குவதாகவும் உறுதி வழங்கினர் ! வேலுப்பிள்ளை பிரபாகரனின் பெயரோடு ஒரு துண்டு பிரசுரமும் வெளியிட்டனர்.

இதனைத் தொடர்ந்தும் நடுநிலை என்று கூறிக் கொண்ட பிரமுகர்களிற்கு குறைந்த பட்ச மதிப்பளிக்கும் வகையிலும், சாகும் வரை உண்ணாவிரதம் இடை நிறுத்தப்பட்டது ! அதன் பின்னர் "கிராமம் கிராமமாகப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதயாத்திரை என்ற வடிவத்திற்குப் போராட்டம் மாற்றப்பட்டது !

பாதயாத்திரைக் குழுவினர் மக்களின் வரவேற்புகளோடு கிராமங்கள் தோறும் சென்றனர். இந்த வேளையில் சாவகச்சேரியில் வைத்து LTTE குண்டர்களால், மாணவர்கள் மிருகத்தனமாக முதலில் தாக்கப்பட்டனர். இதன் பிறகு மிகுதி எல்லா இடங்களிலும் இவ்வாறே தாக்கப்பட்டனர். அமைதிவழிப் போராட்டத்தில் குருதி வழிந்தோடி தமிழ் மண்ணில் கறையாகிப்போனது ! இப்பொழுது முதன்முதலாக LTTEஇன் உறுதிமொழி மீறப்பட்டது. U.T.A.உம் நடுநிலையாளரும் கைகட்டி நின்று வேடிக்கை பார்த்தனர். U.T.A.இன் முக்கிய நபரும் யாழ்ப்பாணத்தின் கொழுத்த பிரமுகருமான க. சிவத்தம்பி போன்ற பச்சோந்திகள் போராட்டத்தை நிறுத்தி விட்டுப் படிக்கப் போகுமாறு இரைந்தார் !

தொடர்ச்சியான எல்லாப் போராட்டங்களும் இடைநிறுத்தப்பட்டது ! அநாதரவான நிலையில் புத்தகங்களையும் காவிக்கொண்டு மறுபடி மாணவர்கள் படிக்கப் போயினர். காதோரத்தில் துப்பாக்கி உறுத்திக் கொண்டிருக்க கைகளில் புத்தகம் ! கருவுற்ற ஜனநாயகம் சிதைக்கப்பட்டது ! அராஜகம் தனது கால்களை ஈழமண்ணில் ஆழப்புதைத்துக்கொண்டு கோரப்பற்களை மக்களின் மீது மீண்டும் பதித்தது.

போராட்டத்தில் முன்னணியில் நின்ற அனைத்து நபர்களும் அச்சுறுத்தப்பட்டனர். பலர் நாட்டை விட்டுத் தப்பியோடினர். ஒரு மாணவன் கைது செய்து தாக்கப்பட்ட பின்னர் அரசியலில் ஈடுபடமாட்டேன் என்ற உறுதி மொழி கொடுத்த பின்னர் விடுதலை செய்யப்பட்டான் ! அப்போதும் விமலேஸ்வரன் பல்கலைக் கழகத்திற்கு வந்து போனான். சில நாட்களில் விமலேஸ்வரனை LTTEஇனர் தேடத் தொடங்கினர். ஆனால் விமல் தனது மண்ணையும் மக்களையும் விட்டுத் தப்பி யோட முயலவில்லை ! அந்நிய நாடு ஒன்றில் அரசியல் அகதியாகி மண்ணை மறந்து போய் வாழ்க்கை நடத்த விரும்பவில்லை ! உரும்பிராயிலுள்ள வறிய கூலி விவசாயிகளின் ஊரிற்குச் சென்று தலை மறைவானான். அந்த மக்களின் ஒத்துழைப்போடு அந்த மண்ணில் அவர்களோடு ஒருவனாக வாழ்ந்தான் வாழ்தல் என்ற சமூகக் கடமையை அர்த்தமுள்ளதாக்கினான் ! அந்த மக்களின் குழந்தைகளுக்கு அன்பான ஆசிரியனாகினான். அவர்களில் ஒவ்வொருவரும் தம்மில் ஒருவனாக அவனை நினைத்தனர். அவன் தலைமறைவாய் இருப்பது அத்தனை பேருக்கும் தெரியும் ஆனால் யாரும் அவனைக் காட்டிக் கொடுக்கவில்லை. அவன் இந்த மண்ணில் பிறந்தது அவர்களுக்காகவே என்று நினைத்தனர். அவன் விரலசைத்தால் அந்தக் கிராமமும் அசையும் என்ற அளவுக்கு விமல் பங்குவகித்தான் ! அவனது சொந்த அம்மா, அப்பா, அன்பான காதலி இவர்களுக்கும் மேலாக அவனும் அவர்களை மதித்தான் ! மக்களின் நலனுக்குப் பிறகு தான் சொந்த நலன்கள் எனத் தெளிவான கோடுகளைப் போட்டுக் கொண்டான் மரணமும் துப்பாக்கியும் சேர்ந்தபடி ஆட்சி செலுத்தும் ஒரு தேசத்தில் சொர்க்க பூமியொன்றிற்கு அத்திவாரம் போட்டான் ! வறுமையும் கொடுமையுமே, அறியப்பட்டவையாய் இருந்த மக்களுக்கு, மனிதத்தையும் அறிவையும் அறிமுகப் படுத்தினான் !

அதன்பிறகு நாட்கள் நகர்ந்தன. தமிழ் ஈழத்தின் அரசியல் வரலாறு மாற்றங்களைக் கண்டது ! I.P.K.F. என்ற இந்திய ஆக்கிரமிப்புப் படை தமிழ் ஈழத்தின் எல்லைக்குள் நுழைந்து கொண்டது. LTTEஉடன் போர் என்று பூச்சாண்டி காட்டிக்கொண்டு ஈழத்தில் தனது இருப்பைப் பேணிக் கொள்ள முயன்றது ! அப்போது இருந்த அரசியல் சூழலை புதிய வடிவத்திற்கு மாற்றியது. தேச விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் மீண்டும் ஒரு பாய்ச்சல் நிலை வீக்கம் தோன்றிற்று.

இந்த நிலையில், விமலேஸ்வரன் வெளிவந்து உலாவத் தொடங்கினான்! கோப்பாய்ப் பகுதியிலுள்ள பல கிராமங்களில் வறிய மக்களோடு அவர்களது துயர் சூழ்ந்த வாழ்க்கையோடு இணைந்து கொண்டு அவர்களின் சமூக, அரசியல் முன்னேற்றத்திற்காகத் தன்னை அர்ப்பணித்தான். பல்கலைக் கழகத்திற்கு மீண்டும் சென்று மாணவர்களோடு இணைந்து கல்விகற்றான். மக்களுடைய வரிப்பணத்தில் இலவசக்கல்வியைக் கற்றுக் கொண்டுவிட்டு, அந்நிய நாட்டுக்கு அரசியல் அகதியாகத் தப்பியோடவில்லை. மக்களுக்காக வாழ்ந்தான்.

18/07/88 அன்று மாலை 2.30 மணியளவில் கல்வியங்காட்டிலுள்ள சட்டநாதர் கோவிலுக்கு அருகில் வைத்து ஈழத்தின் அரசியல் வரலாற்றில் மற்றுமொரு ஜனநாயகப் படுகொலை நிறைவேற்றப்பட்டது ! ஆம் ! விமலேஸ்வரன் சுட்டுக் கொலை செய்யப்பட்டான் ! மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்த ஒரே காரணத்திற்காக, மாணவர்களின் அடிப்படை உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த ஒரே காரணத்திற்காக, நடுத்தெருவில் அநாதைப் பிணமாய் வீழ்ந்து கிடந்தான் ! அவன் இரத்தம் ஈழ மண்ணை முத்தமிட்டுக் கொண்டது ! தேசத் துரோகிகளின் துப்பாக்கிக் குண்டுகள் ஒரு தேசபக்தனை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெருவோரத்தில் சுட்டு விழுத்திற்று ! அவன் வரவில்லை !

விஜிதரன் தொடர்பான போராட்டங்களில் ஈடுபட்ட பலர், இன்றைக்கு தமிழ் ஈழத்தில் இல்லை ! ஒரு மாணவன் LTTEஇனால் கடத்தப்பட்டு 4 மாதங்கள் வரை இருட்டறையில் சிறைவைக்கப்பட்டுச் சித்திர வதை செய்யப்பட்டான், விஜிதரன் போராட்டத்தில் ஈடுபட்டோர் தொடர்பாக துருவித்துருவி விசாரிக்கப்பட்டான் ! ஜன நாயகத்திற்கான போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரும் மரண பயத்துடன் வாழ்ந்தனர். சிலர் நாட்டை விட்டுத் தப்பியோடினர். சிறைவைக்கப்பட்ட அந்த மாணவன், ஒரு நாள் சிறையின் கூரை வழியாகத் தப்பி யோடி தலைமறைவாக இருந்த பின்னர் பல்கலைக்கழகம் வந்தான். அச்சுறுத்தல் தொடர்ந்தது ! விமலேஸ்வரன் கொல்லப்பட்ட பிறகு நாட்டிலிருந்து வெளியேறிவிட்டான் !

எமது தேசத்தில் மறுபடி எல்லாம் வழமை போல்..... புத்தகங்களோடு படிக்கச் செல்லும் மாணவர்கள், செம்மண் புழுதியோடு போராடும் அந்த மக்கள் ; மினிபஸ்ஸில் முண்டியடித்துக் கொண்டு, ஏதோ தொலைந்து விட்ட அவசரத்தில் போகும் மக்கள் ; முற்றத்து மல்லிகை ; வயல் பச்சை..... எல்லாம் வழமை போலவே..... ஆனால் அவன் மட்டும் இல்லை !

அவன் கருத்துக்களோடும் செயல்களோடும் மோதிப் பார்க்கத் துணிவற்ற LTTE குண்டர்கள் துப்பாக்கிக் குண்டுகளை அனுப்பி கோழைத்தனமாகக் கொன்று போட்டனர், சட்டநாதர் வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, LTTE உறுப்பினர்களான கரிகாலன் (கௌரிபாலன்), குமார் (செல்வகுமார்) ஆகியோரால் கொலை செய்யப்பட்டான் ! அவன் சாகும் வரை உண்ணாவிரதத்தில் இறந்து போயிருந்தால், சிலவேளை ஜனநாயகம் துளிர்விட்டிருக்கும். அப்போது நடுநிலை வகித்த பச்சோந்திகள் இன்றைக்கு LTTEஇன் கால்களை நக்கிப் பிழைத்துக் கொண்டு வாழ்கிறார்கள் !

LTTEஇன் முக்கிய குணாம்சங்களில் ஒன்று ஸ்தாபகர்களையும், அமைப்பாற்றல் உள்ளவர்களையும் தீர்த்துக் கட்டுவது என்பது அவர்கள் யாராயிருந்தாலும் சரி!

இந்த வகையில் தான் ராஜினி என்ற விரிவுரையாளர் கொல்லப் பட்டார் !

பத்மநாபா, உமாமகேஸ்வரன், சிறீ சபாரத்தினம் போன்ற காட்டிக் கொடுத்த தேசத்துரோகிகளின் கொலைகளுக்காகக் கூச்சல் போட்டு ஒப்பாரி வைக்கின்றவர்களே, விமலேஸ்வரன் இவர்களில் ஒருவனல்ல ! உண்மையான தேசபக்தன் ! ஒருபுறத்தில் மக்கள் மீது அராஜகத்தின் கோரப்பற்களைப்பதித்துக் கொண்டு மறுபுறத்தில் ஜனநாயகத்திற்காக கூக்குரல் போட்டவனல்ல விமல் ! இறுதிவரைக்கும் ஜனநாயகத்திற்காக உணர்வு பூர்வமாகக் குரல் கொடுத்தவன் ! எந்தப் பக்கத்திலிருந்து அடக்கு முறையும், அதிகாரத்துவமும் ஆட்சி செலுத்துகிறதோ, அந்தப் பக்கத்திற்கெல்லாம் ஆக்ரோஷமாக எதிர்க்குரல் எழுப்பியவன் அவன் !

அவன் சுவடுபதித்த இடமெல்லாம் நெருப்பெரிந்தது ! அவனது சொந்த ஊரான பூநகரியில் சாவீடு நடந்தது ! பல்கலைக்கழகம் மயானமானது ! எங்கும் அழுகுரல்கள் ! இறப்பு என்பது எப்போதாவது வரலாம் ! ஒவ்வொரு வீட்டிலும் அழுகுரல்கள் எப்போதாவது கேட்கலாம். ஆனால் ஈழமண்ணில் மக்களை நேசித்தோர் வீட்டில் நாள்தோறும் மரண ஓலம் ! விமலின் அன்பான தங்கை, அம்மா எல்லோரும் ஓலமிட்டனர். அவன் வரவில்லை ! சிவத்தம்பி போன்ற பிழைப்பு வாதிகள் கைகட்டி வாய் மூடி மௌனிகளாய், நடந்து முடிந்தவற்றோடு சம்பந்தமில்லா தவர்களாய் தமது வீட்டு யன்னல்களை இறுக மூடிக்கொண்டு நிம்மதியாய் உறங்கிப் போயினர்.

பல மாணவர்கள் தொடர்ச்சியாகக் கண் காணிக்கப் பட்டனர். இதே மாணவர்களில் பலர் I.P.K.F.இன் அடக்கு முறைக்கு எதிராகக் குரல் கொடுத்து, I.P.K.F.இனாலும் E.P.R.L.F. கொலைவெறிக் குண்டர்களாலும் தாக்கப் பட்டனர்! ஆனால் LTTE என்ற சமூகப் பாசிசக் கும்பலின் கண்காணிப்பும் அச்சுறுத்தலும் ஓயவில்லை !

விமலேஸ்வரன் இன்றைக்கு இல்லை ! ஆனால் அவனது உறுதியும், செயல்பாடுகளும் அழிந்து போய்விடவில்லை ! அவன் நடந்து சென்ற பாதை வெறுமையாகிக் கிடக்கிறது ! அதிகார வெறியர்களாலும், பாசிச அரசாலும் திட்டமிட்டு சீரழிக்கப்பட்ட தேசவிடுதலைப் போராட்டம் ஆயிரக் கணக்கான இனிய உயிர்களைப் பலி கொண்டு விட்டது ! இரத்தக் காட்டாறுகளையே எமது தேசத்தின் இயற்கை வளம் என்று பறைசாற்றிக் கொள்கிறார்கள் தேசத் துரோகிகள். பச்சிளம் பாலகர்கள் துப்பாக்கிகளோடு விளையாடுவதை தமிழ் ஈழத் தாகம் என்று விலாசமிட்டுக் கொள்கிறார்கள் ! தேசத்தின் மீது பற்றுள்ளவர்களே ! மக்களை நேசிப் பவர்களே, ஜனநாயகத் துக்காக குரல் கொடுப்போம் ! தேச விடுதலைப் பாதையைச் செழுமைப்படுத்துவோம் ! விமலேஸ்வரன் நடந்து சென்ற பாதை இன்றும் வெறிச் சோடிக்கிடக்கிறது ! இறந்து போனபோது ஒரு அஞ்சலிக் கூட்டத்தைக் கூடக் காணாமல் போன அந்தத் தியாகியின் வழிகாட்டல்கள் எம்முன்னே நீளக்கிடக்கிறது !

www.tamilarangam.net

# ஒரு கிராமத்தின் ஆத்மாவில்———?

எங்கள் கிராமத்தின்
ஆத்மாவோடு — — —
இரண்டறக் கலந்துவிட்டவன்
அந்தக் — — —
கண்ணாடி மாஸ்டர்.
ஆம் — — —
அதுதான் நாம்
அவனுக்குச் சூட்டிய
அன்பு மகுடம்
1986 ஆம் ஆண்டில்
ஓர் இரவு —!!
அப்போது நேரம்
எட்டுமணிக்கு மேல் — — —
ஆம் — — —
அந்த நேரம் தான்
எமது கிராமத்தில் ஓர்
புதிய விடி வெள்ளி
தோன்றிய நேரம்
நிலைய முன்றலில்
வழமை போல் இளைஞர்கள்
கூடியிருக்கிறார்கள்
திடீரென்று ஓர் இளைஞன் —!
எமது — — —
வாசிகசாலை முன்றலில்
வந்து நிற்கின்றான்.
வாட்ட சாட்டமான உடல்
வடிவழகன் தான் அவன்
அகத்தின் அறிவொளியில்
பிரகாசிக்கும் அவன்
அன்பு முகம் — — —
அந்த முகத்திலே
கருணைக் கடலாய்
பொங்கி எழும் ஓர்
புன்னகையோடு
அவன் — — —
எங்கள் முன் நிற்கின்றான்.

யாரவன் — — — ?
எங்கள் ஒவ்வொருவர் இதயத்திலும்
எழுந்து நிற்கும் கேள்வி
விஜிதரனுக்காக வீரத்துடன் போராட
இன்று — — — !
தலை மறைவாய் வாழும் ஓர்
பல்கலைக்கழக மாணவன்
என்பதை அறிகின்றோம்
விஜிதரன் — — —!? போராட்டம் — — — ?
எமக்கு முற்றாக விளங்கவில்லை
உண்மை தான் — — — !
நாம் — — — !
ஏட்டை அறியோம்
எழுத்தை அறியோம்
ஆனால் — — — !
அன்பை அறிவோம் அதன்
இன்பத்தை நாம் அறிவோம்
ஜீவகாருண்யத்தில்
நிறைந்திருக்கும் எம்
நெஞ்சங்கள்
உன்னை ஏற்றுக்கொண்டது
உனக்காக — — —
எந்த ஆபத்தையும்
ஏற்றுக்கொள்ளத் தயாரானது.
கல்லும் — — — ! முள்ளும்
பற்றையும் — — — ! கடலையுமாய்
காட்சிதரும் எமது
வாழ்விடம் நீ
மறைந்து வாழும்
புகலிடமாய் மாறியது.
எம்முடன் இரண்டறக்
கலக்கத் தொடங்கினாய் — — — !
அக்கா — — — ! தங்கை — — — ! என்று
நீ அழைக்கும் அழைப்பிலே
எமது கிராமத்துப் பெண்கள்
அறிவைப் பெற்றனர்
அண்ணா — — — ! தம்பி என்று
உன் — — — !

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அம்மாச் சொல்லிலே
நாம் — — — !
விருந்தை உணர்வைப் பெற்றோம்
ஆம் — — — !
ஒரு மாதம் தான் எங்கள்
சொந்தத்திற்கு நீ வந்து
என்ன ஆச்சரியம் — — — !
புழுதியைக் குடித்து வளர்ந்த
எங்கள் பிள்ளைகள் தான்
எல்லாமே மாறிவிட்டார்கள்
படிப்பிலே மாற்றம்
பண்பிலே மாற்றம்
அறிவிலே மாற்றம்
அகத்திலுமே மாற்றம் தான்
கண்ணுறக்கத் தேரின்
அமைதியயின்றி
அவர்கள் தூங்கவே மாட்டார்கள் — — — !
கண்ணுறக்கத் தேவை
நடுவிலே விட்டு
அலைகளைச் சுற்றும் விழுதும் போல்
சென்றி அமைத்து - எம்
பழமைச் செல்வங்கள்
எமது நீ மப் பாடசாலைக்குள்
தூங்கும் காட்சி — — — !
விடுதலையை விழுங்கி விட்டு
துப்பாக்கிச் சன்னங்களை
வாந்தி யெடுப்போர்க்கு
புரிந்து கொள்ள முடியாத
புதிய காட்சி தான்
ஒவ்வொரு நாளைக்கு
ஒவ்வொரு வீட்டில்
உனக்கு நாம்
உணவளிப்போம்
எந்த நாளும் எங்கள் வீட்டில் தின்று
எம்மை நட்டப்படுத்துகிறேனே — — —.
எனப் பொருளாதாரக்
கணக்குப் பார்க்கும்
மனிதர்கள் நடுவே

எங்கள் வீட்டில் உண்ண வேண்டும்
எங்கள் வீட்டில் தங்கவேண்டும்
என — — — ! உபசரிக்க
எமக்குள் சண்டை செய்வோம்.
இப்படியாக எம்முடன் நீ
இரண்டறக் கலந்து வாழ்ந்தாய்.
காலமோ — !
எமது வாழ்க்கையிலே — தன்
கோலத்தை இட்டுச்
சென்று கொண்டேயிருந்தது
எம் தேசத்தின் கொள்கையும்
மாற்றம் கண்டது.
ஆனால் — — — !
எங்கள் வாழ்க்கை தான்
மாறவேயில்லை — — — !
வழமை போல் தான்
அன்றும் எங்கள்
பொழுது விடிந்தது
கையிலே ஆயிதங்களுடன்
எங்கள் வயிற்றை நிரப்பும் அந்தக்
கல்லுக்கிடங்கை நோக்கி
நாம் — — — !
சென்று விட்டோம்
இரவு முழுவதும் அங்கே
தூரத்தில் முழங்கிய
வெடிச்சத்தம் — — — !
திடிரென எம்மை நோக்கி
விரைந்து கொண்டு வந்தது.
கிராமத்தி மூலை முடக்கெல்லாம்
மரண ஓலங்கள் — — — !
மக்கள் சிதறி ஓடினர் — — — !
தம் உயிரைப் பாதுகாக்க
சகலரும் ஓடிய போதும்
உன் உயிரை மட்டும்
பாதுகாக்க நீ ஓடவில்லை
மரணத்தை நோக்கிய
பயணத்தில் கூட நீ
எம்முடன் வந்தாய்"
நாமும் உன்னுடன் தான் — — — !

www.tamilarangam.net

அகதிகள் முகாமில்
எமக்கோர் புதிய அனுபவம்
அங்கும் ஆடி ஓடி
எமக்காக நீ செய்த
சேவைகள் — — — ! தியாகங்கள் — — — !
அத்தனையும் முடிந்து நாம்
அனைவரும் எமது கிராமத்திற்கு திரும்பினோம்
எம் கிராமத்தின் சூழலிலே
தொடர்ந்தும் ஏற்பட்ட மாற்றம்
எம்மைப் பயமுறுத்தியது
எமக்காக அல்ல
உனக்காக நாம் பயந்தோம்
தொடர்ந்தும் எம்முடன் நீ
இருந்தால் ஏதாவது ஆபத்து
உனக்கு வந்துவிடுமோவென
அஞ்சி—!
ஓர் மூன்று மாதம்தானே
உன்னை எம்மிலிருந்து
பிரித்து வைத்தோம்.
அதற்குள் நீ எங்கு சென்றாய்—?
உனக்கொரு பிள்ளையிருந்தால்
அதைக் கடத்திவந்து
எம் கிராமத்தில்
வைத்துக் கொண்டு
எம் கிராமத்திற்கு
எங்கள் கண்ணாடி சேரை
வரவழைப்போமென
உன் — —
பழமைச் செல்வங்கள் — —
அன்பெனும் நீர் ஊற்றி
நீ வளர்த்து வந்த அந்த
அன்பு மலர்கள் — —!
உங்களைக் காணும் ஆசையில்
நீங்கள் கற்றுக் கொடுத்த
புத்த முறையில்
சிந்திக்கின்றார்கள்
அவர்களுக்கு — — —!
அந்தச் சின்னஞ் சிறுசுகளுக்கு
நாம் பதில்சொல்ல வேண்டும்

நீ எங்கு சென்று விட்டாய் — — — !
ஐயோ — — — !!
எங்கள் கண்ணாடிச் சேர்
மரணித்து விட்டாராம்
உன்னை — — — உன் வாழ்க்கையை
புரிந்து கொள்ளாத சிலர்
உளறுகின்றார் — — — ?
நாம் இருக்கும் வரை
நீ எப்படி மரணிக்க முடியும் — — —
இல்லை — — — ! இல்லவேயில்லை
நீ வாழுகின்றாய்
எம் நெஞ்சங்களில் வாழுகின்றாய்
எமக்கு உற்ற துணையாய் நின்று
உன் கொள்கையால்
எம் உள்ளத்திற்கு
உணர்ச்சியை ஊட்டுகின்றாய்
ஆம் — — — !! நாமிருக்கும் வரை
உன்னைக் கொல்ல முடியாது.
கொல்லவே முடியாது.
எங்கள் ஊனில் — — —
எங்கள் உள்ளத்தில் — — — !
எங்கள் ஆவியில்
நீ — — —!
இரண்டறக் கலந்து விட்டாய்
நாம் இருக்கும் வரை
உன்னைக் கொல்லவே முடியாது
ஆனாலும் உன்னைக் கொன்று விட்டார்களாம் — — !
மக்களின் இதயத்தை புரியாதவர் புலம்புகின்றார்.
எங்கள் கண்ணாடி சேரின்
உடலிலே — — — நெருப்பாய் — — — !
எங்களை நேசித்த அந்த இதயத்திலே — — — !
நெருப்பாம் — — — !!
எங்களை அணைத்த அந்தக்
கரங்களிலே — — — !

www.tamilarangam.net

நெருப்பாம் — — — !!
ஓ — — — !
எங்கள் நேசத்திற் குரியவனே — — — !
உன் உடலை விழுங்கும் அந்த
நெருப்பு — — — !
நீ வாழும் எங்கள் இதயங்களிலும்
நிச்சயம் எரியும்.
அதை அணைத்து — — — !
உன் ஆத்மாவை மீங்கும் வரை
நாம் ஓடமாட்டோம் — — — !
ஆம் — — — !
நாம் ஓயவே மாட்டோம்.

(விமலேஸ்வரன் என்னும் வீர இளைஞனின் நினைவிற்காக — — — ! அவன தலைமறைவு வாழ்கையில் மக்களுக்கும் அவனுக்கும் இருந்த உறவுப் பிணைப்பை மையமாகக் கொண்டு இக்கவிதை புனையப்பட்டுள்ளது.)

ஒரு கிராமிய நண்பன்
06-08-1988.

ஒவ்வொரு வீட்டிலும் அழுகுரல்கள் எப்போதாவது கேட்கலாம். ஆனால் ஈழமண்ணில் மக்களை நேசித்தோர் வீட்டில் நாள்தோறும் மரண ஓலம் !






www.tamilarangam.net

<u>நீ வரைந்த கோடுகள்</u>

கணீர் என்று
ஒலிக்கிறது எங்கள்
தொலைபேசி ;
நிதானமாய் எடுத்து
றிசீவரைக் காதோரம்
மிக அருகில் வைத்து
ஹலோ என்கிறேன் !
மறு முனையில்
ஹலோ அக்காவா
விமலேஸ் கொல்லப்பட்டான்.....!
வார்த்தைகளல்ல
ஈயக் குண்டுகள்
உருக்கி என்
காதில்
ஊற்றப்பட்டது.
விமலேஸ் கொல்லப்பட்டான்
நம்பவா ?

உழைக்கும் மக்கள்
உன்னைக் காத்திட
மறைவிடம் தந்தனர்
நீயோ அதனை
புரட்சிக் கூலமாய்
மாற்றியே விட்டாய்
உன்தலை தேவை
என்பதற்காக
உன்மீது சுமத்திய
பாரங்கள் !
யாரும் விளங்காதவர்கள்
சொல்லலாம்
தலைமறைவாய் இருந்தாய்
என்பதாய்.

கல்லுடைத்து
கால்வயிற்றை நிரப்பும்
மக்கள் கூட்டத்துக்குள்
நீயிருந்தாய்
ஓர் கையில் சம்மட்டி
மறுகையில் விரித்துப்பிடித்த
தத்துவப் புத்தகம்
அரிச் சுவடியையே
அறியாத
அவர்கள் குழந்தைகளை
வட்டமாய் இருத்தி
கல்விக் கண்ணை திறந்தபோது
அவர்களை விட
நீயே மகிழ்ந்தாய் !
நாங்கள் உன்னை
பார்க்க வந்த போது
சில கோடுகள் போட்டு
இது மார்க்ஸ்
இது ஏங்கல்ஸ்
பிள்ளைகளுக்கு
விளக்கம் கொடுத்தபோது
நாங்கள் சிரித்தோம்
நீ வரைந்த கோடுகளில்
அவர்களை தெரியவில்லை
ஆனால்
நீ நடந்த பாதைகளில் ?

தங்கள் நலனுக்காய்
எம்மவர் வருந்தும் போது
நீ வருந்துவது
கிராமத்து மைந்தர்தம்
துன்பத்தைக் கண்டு
மட்டுமே !

www.tamilarangam.net

இது விதியென்பர்
மற்றோர்
நீ மாற்றலுக்
குரிய தென்பாய்
நான் மறுக்கமாட்டேன்
முடியாதென்று நினைப்பது
பலதையும்
முடித்துக் காட்டியவன் நீ !
மேடும் காடும்
மேவிக் கிடந்த
வன்னி மண்ணில்
விளைப்பை அறுத்தவன் நீ
உனக்கென்றோர் அகராதி
அதில் சில
சொற்கள் குறைவு
அதை நான் ஏற்கிறேன்.

மிரட்டலை கடத்தலை
நிறுத்த வென்று நீ
உண்ணா விரதியாய்
இருந்தாய் ஓர் நாள்
அன்று நீ
இறந்தாயாகில்
ஓர் சில மூடர்
மூளையில் சுருக்கென்றிருக்கும் !
தனியனாய் உன்னை
வீதியில் வீழ்த்தினோர்
விசமிலும் கொடியோர் !
விதியென்றுரைப்பார்கள்
கினியர்
எதிர்மறை சொல்வார்.

உன் உடல் மறைந்து
மூன்றம் நாளதில்
என்கையில்
ஓர் கவர்
தந்தனர் வீட்டார்
நீ எழுதிய செய்தி
என்னிடம் வருமுன்
இறந்த செய்தியா
வந்து தொலைந்தது !
கண்கள் நனைந்தது
அள்ளி விழுங்கிய
நெருப்புத் துண்டது
நெஞ்சிடை நின்று
சூழ்வது போலொரு
வேதனை.
படிப்பினை மீண்டும்
தொடர்வதாய் நீயும்
எழுதியிருந்தாய்
விமலா நீ படித்திட
இனிமேல் என்ன இருக்குது !
இதனை அறிந்தே
அழித்தனர் போலும்
மூடர்கள் அறியார்
நீ மூட்டிய
சிறு பொறி
பரந்து கிடப்பதை.

- சாந்தி

www.tamilarangam.net

நீ இறந்த செய்தி கேட்டு எத்தனை மக்கள்
கதறினர், அழுதனர், இவர்கள் யாவரும்
இன்றைய பொழுதின் உணவைத்தேடி.
இன்றே புறப்படும் இல்லாமக்களே
ஏனிவர் இங்கே உன்பிரிவெண்ணி.
தமக்குள் குமுறினர்
ஓ... வறுமையில் வாடி வதங்கியபோது
பாலைவனத்தின் பனிமழை போன்று
நீர் தணித்திட்ட பசியினை இவர்கள்
எண்ணினர் போலும் இதனால் இங்கு
இத்தனை மக்களும் கதறி அழுதனர்.

காட்டினை அழித்து களனிகளாக்கி
கொழுந்தினை கிள்ளி தேயிலையாக்கிய
வறிய மைந்தரின் உப்புக்கஞ்சியை - தட்டிப்பறித்து
அடித்துவிரட்டி அனுப்பியபோது
வன்னிக்காட்டின் வைரமரங்களை
தறித்து அமைத்த சிறுகுடில் தன்னில்
உடமையை இளந்தமக்களைக்கூட்டி
வன்னியின் மண்ணை சொந்தமாக்கிய
உன்திறன் தன்னை எண்ணினர் போலும் !
இதனால் இங்கு
இத்தனை மக்களும் உப்புவென்நீரை
உனக்காய் சொரிந்தனர்.

நகர மாந்தரை நன்கு ஏமாற்றி
சிவப்புச்சட்டையில் பட்டயம் பொறித்து
நாமும் மார்க்சீயவாதிகள் நாளைய தேர்தலில்
பூர்சுவா ஆட்சியை தூக்கியே வீசிட
ஒன்று சேர்ந்து உழைப்போம் என்று
ஓட்டுப் பொறுக்கும் தேசிய துரோகிகள்
மக்களை ஏய்த்து வாழ்கிறபோது
வறிய மக்களில் ஒருவனாக
வெயிலும் மழையும் வாட்டிடும் போதும்
வயல் வெளி தன்னில்
பயிர்களைக்கெடுக்கும் களையினை பிடுங்கி
வயலைச் செழிக்க வைத்தது போலவே
வறிய மக்களின் வயிற்றில் அடிக்கும்
பேர் முதலாளியின் செய்கை உணர்த்தி
இவர் தம் வாழ்வை செழிக்க செய்யும்
தத்துவம் தன்னை கதைபோல் சொல்லி
நடைமுறை தன்னில் நடந்து காட்டியே
போகும் பாதையில்
ஓநாய் ஒன்றுனை குதறிய சேதியை
அறிந்த அம்மக்கள் கதறித் துடிக்கும்
காட்சியை இன்று நீ
எப்படிக் காண்பாய்.

- வைகை வளவன் -

www.tamilarangam.net

# நிலைத்திருக்கும் நினைவுகள் !

எம்மை விட்டு பிரிந்த நண்பன் விமலேஸ்சின் பல்கலைக் கழக பாதைச் சுவடுகள் மக்கள் நலன்களை, மாணவர்களின் நலன்களை, கருத்தில் கொண்டொழுகும் எந்தொரு மாணவனுலும், மாணவியினுலும் பாதையாக கொள்ளத் தக்கவை.

நண்பன் விமலேஸ்வரனின் சாந்தமான மனப் பாங்கும் இனிமையான சொல்வளமும் எதனையும் சிந்தித்து செயல்படும் திறனும், எதற்கும் அஞ்சாத மனத் துணிவும் ஒற்றுமையே வேண்டும் என்ற அவனின் கொள்கையும் எங்களால் என்றும் மறக்க முடியாதன. மட்டுமன்றி எவராலும் மறுதலிக்கவும் முடியாதன:

படிப்பை மட்டுமன்றி பாட்டாளி மக்களுடன் மக்களாக எமது இன விடுதலையும் கருத்தில் கொண்டவனுக இருந்தான். பல்கலைக் கழகம் மேற் கொண்ட அனைத்துப் போராட்டங்களிலும் முழுமனதோடு பங்கேற்ருன். ஆனுல் நாம் இன்று விமலேஸ்சை இழந்து நிற்கின்ருேம்;

யாழ் / பல்கலைக் கழக மாணவர்கள் சார்பாக,
கலைப்பீட மாணவர்கள்.

---

# எமன் குடித்தானே உன்னுயிரை ஏன் குடித்தானே ?

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் சிகரமாய், எளிமையின் உருவாய்
ஏழைப் பங்காளனுய் மாண்புடன் வாழ்ந்தவனே !
அறிவுக் களஞ்சியமாய் பல்கலையும் கற்று
அறிவொளி பரப்பியவனே !
பகைவனையும் கருணையுடன் மன்னிக்கும் பண்பு கொண்டவனே !
உனக்கா இக்கதி நேரவேண்டும் ?
உன்சேவை பெற்று உயர்வடைந்தோர் ஒருவரா இருவரா ?
உன்பிரிவால் துயருறுவோர் ஓர் சிலரா ?
எறும்பிற்கும் எண்ணியொரு தீங்கு செய்யாத உன்னுயிரை
எவன் குடித்தான் ? ஏன் குடித்தான் ?
உன்னை இழந்து துன்பத்தின் எல்லையில் நிற்கும் நாம்
உனது ஆத்மா சாந்தியடைகவென
எமது கண்ணீர் துளிகளைக் காணிக்கை ஆக்குகிருேம்:

உன் பிரிவால் துயருறும்
பூநரி வாழ்
சகோதரிகள், சகோதரர்கள்.

# எமக்குப் புரியவில்லை !

சேர்... !
நீங்கள் செய்த
சேவைகளை அறிவாரா
உங்களை
துடிக்கத் துடிக்கச்
சுட்டுக் கொன்ற
அப்பேதை மனிதர்கள்... ?
சில பேதை மனிதர்களோ
பணத்தைச் சேர்த்தார்கள்
ஆனுல் நீங்களோ...?
ஏழை மக்களையும்
கல்வி கற்கும்
மாணவர்களையும் சேர்த்தீர்கள்
அதனுல் ........
நீங்கள் இறந்த
செய்தி கேட்டு

உங்கள் உறவினர் மட்டுமல்ல
சில கிராமங்களே
ஆற்ருத துயரில்
கண் கலங்குகின்றன
ஏழைகளின்
பங்காளனுன
உங்களை...
அப்பாவியர்கள்
ஏன்...துடிக்கத் துடிக்க
கொன்றனர் ...?
அக்காரணம்தான்
எமக்குப் புரியவில்லை... ?

— ருபன் —

4-8-88

"விமலின் இலட்சியப் பயணத்தில் அவன் கரங்களில் வளர்ந்த 13 வயதுச் சிறுவன் ஒருவனின் 'இதயக் குமுறல்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயிரம் கரங்களிருந்து ஆறுதல் தந்தாலும்

அண்ணனின் கரமின்றி ஆறுதல் அடைவேனா ?

பதினெட்டாந் திகதியதில்
பதட்டத்துடன் செய்திகேட்டு
பறந்தோடி வரவே நான்
தெருவோரத் திண்ணையிலே
தென்புடனே படுத்திருந்தாய்
அழுகை வரவில்லை
ஆத்திரமே வந்ததண்ணா
அழுவதை நீ விரும்பாயே
ஆக வேண்டியன பார்த்தேனே.

உடன் பிறப்பிலான
உறவாக மட்டுமன்றி,
அறிவுபல கூறுவதில் நல்
ஆசிரியனாய் இருந்தாயே
நேர் பாதை காட்டியதில்
நல்வழி காட்டியானாய் நீ
கவலைகளைப் பகிர்ந்து கொள்வதிலே
நண்பியாகத் தானிருந்தாய்
ஆயிரம் கரங்களின்று
ஆறுதல் என்றபோதும்
அண்ணனின் அன்புக் கரங்களின்றி......
ஆறுதல் அடைவேனா ?

அறிவு நூல்கள் பல
ஆசையுடன் தந்தாய்
பரீட்சை முடிய நானும்
படித்து விளக்கமதை
கேட்டறிய வென்றிருந்தேன்
அன்று நீ தந்த அறிவுக்கே
நன்றி கூறி - இன்று நான்
நானிலத்தில் வாழுகின்றேன்.

கனடா சென்று கல்வி
கற்க வென்றே அன்று
உனையழைத்தார் அண்ணா
நீயோ......... நன்றிகூறி
தாய்நாடு தமிழ் மக்கள் என்று
தத்துவங்கள் கூறிநின்றாய்
தமிழனே யமனாகி
குடித்தானே உன்னுயிரை !

வீட்டிற்கு நீ வந்தால்
விமல் அண்ணாக் குட்டி என்று
விரைந்தோடி வருவேனே !
விநாடி நேரம் கூட
வீண் பொழுது ஆக்காயே
விளக்கங்கள் தருவாயே !
இன்று......... எனக்கு
விடியாப் பொழுதாக்கி
விரைந்தெங்கு சென்றாயோ.

— துயர்தாழா அன்புத் தங்கை —




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அமரர். தம்பு விமலேஸ்வரன்

விமலேஸ்வரன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 1983 இல் இருந்து 1987 வரை கல்வி பயின்றவர். வணிகவியல் சிறப்புப் பாட நெறிக்கு அனுமதி பெற்று பல்கலைக் கழகம் புகுந்த ஆண்டிலிருந்து நான்கு ஆண்டுகளின் பின்னர் பரீட்சை எழுதிய காலம் வரை பல்கலைக்கழகத்தில் பலரின் நன்மதிப்பைப் பெற்றதுடன், பல்கலைக் கழக மாணவர்கள் தொடர்பான விடயங்களில் மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் கொண்ட மாணவனாகத் தொழிற்பட்டதையும் பலர் அறிவார்கள். மாணவர்களின் போராட்டங்களில் விமலேஸ்வரனின் பங்களிப்பு முக்கியமானதாக அமைந்தது.

பல்கலைக் கழகத்திற்கு வெளியேயும், விமலேஸ்வரன் அவர்கள் சமூகப் பணிகளில் ஈடுபாடு கொண்டதையும் பலர் அறிவார்கள்.

அன்னாரின் அகால மரணம் பல்கலைக்கழக மத்தியில் பெரும் அதிர்ச்சியினையும், ஆழ்ந்த கவலையினையும் ஏற்படுத்தியுள்ளது. அது அவருடைய குடும்பத்தினர்க்கு ஒரு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

சமகாலத்தில் அவருடன் படித்து, பழகிய மாணவர்களின் மத்தியில் விமலேஸ்வரன் ஒரு நீங்காத நினைவாகிவிட்டார்:

பேராசிரியர் : என். பாலகிருஷ்ணன்
கலைப்பீடாதிபதி,
யாழ். பல்கலைக்கழகம்.

---

யாழ் / பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி.

நண்பா !
நல்லவர்கள் நீண்டகாலம் வாழ்வதில்லை — அந்த
நல்லவர்கள் பட்டியலில் நீயும் ஒருவன்
படிப்பதற்காக போராடினாய் போராடுவதற்காக படித்தாய் —
ஆனால்
போராடியே உன் உயிரை நீ இழந்தாய்
அநியாய அழிவில் நீ அழிந்தாய் — உனை
அழித்தார் அழிவையே நாடுவர்
ஆக்கத்துக்கான அழிவு அல்ல உன் இழப்பு — மீண்டும்
அழிவுப் பாதையை நாடுகிறது இச் சமூகம்
இறப்பும் பிறப்பும் உலக நியதி அது எமக்கும் உண்டு
என்ற மன ஆறுதலில் உன் பிரிவை தாங்குகின்றோம்.

யாழ் / பல்கலைக் கழக மாணவ நண்பன்.

Professor Rajaratnam's address to the students at the memorial meeting held to grieve the loss of T. Wimaleswaran.

" I am associating myself with you in our moment of grief over the loss of one of our popular students, T. Wimaleswaran.

As we cannot live in isolation, loss of every student is a part of a loss of our own selves It 's a great tragedy that the University of Jaffna has lost a number of outstanding students.

Wimaleswaran came from the rural section of the Jaffna district and by hardwork and preserverence, entered the University to read for a prestigous degree. Despite Personal problems, he has infact passed the examination and will be awarded his degree posthumously.

Wimaleswaran was a student activist and devoted most of his time in the protection of student rights. If the price of liberty is eternal vigilance, Wimaleswaran paid the price by his own life.

What more can a man give in his mortal life for a principle but the precious life itself."

Prop. S. Rajaratnam
Head, Dept. of Management Studies

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தன்னலமற்ற ஆசிரியத் தொண்டன்

கடமையுணர்வும் தன்னலமற்ற சேவை மனப்பான்மையும் கொண்ட தம்பி விமலேஸ்வரனின் ஆசிரியப் பணியை எப்படி எழுத்தில் வடிக்கமுடியும்? பல்கலைக் கழகத்திற்கு செல்லமுன்பு இருந்த இடைக்காலத்தை சிறிதளவும் வீணாக்க விரும்பாமல் எமது பூநகரி மகா வித்தியாலயத்தில் அன்று இருந்த ஆசிரியப் பற்றாக்குறையால் மாணவச் செல்வங்களின் அறிவு குறைவுற்றிருந்த காலகட்டத்தில் மாணவர்களின் அறிவை வளர்க்க வேண்டுமென்று கங்கணங்கட்டிக் கொண்டு எவ்வித ஊதியமும் இன்றி இலவச சேவையாக தன் கற்பித்தல் சேவையை வழங்கியவர் அவர். பகுதி நேரங்களில் அதிபருக்கு அலுவலக உதவிகளையும் மிகக் கவனமாகவும், ஒழுங்காகவும் செய்துகொடுத்து பாடசாலை நிர்வாகத்திற்கும் உதவியவர். அவை மட்டுமன்றி விளையாட்டிலும் கலை நிகழ்ச்சிகளிலும் மாணவர்களுக்கு உதவியாக விளங்கியவர். பல்கலைக்கழகப் படிப்பை மேற்கொண்டிருந்த காலகட்டத்திலும் எமது பாடசாலையின் முன்னேற்றத்திற்காகவும், எமது ஊர் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் அரிய உதவிகளைச் செய்துள்ளார். பல்கலைக்கழக புகுமுகத் தேர்வை எதிர்நோக்கிய எமது பாடசாலை உயர்தர மாணவர்களுக்கு கடந்தகாலப் பரீட்சை வினாத்தாள்களையும், பாடப் புத்தகங்களையும் பெற்றுக்கொடுத்து உதவியது மட்டுமன்றி அவர்களுக்காக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மூலமாக நடைபெற இருந்த கருத்தரங்குகளை நடாத்தி முடிப்பதற்கும் தன்னாலியன்ற உதவிகளையும் செய்தவர்:

இத்தகைய ஒரு சமூகத் தொண்டனின் மறைவையறிந்து எமது பாடசாலை மட்டுமல்ல, எமது ஊர் மக்களே இன்று கலங்கி நிற்கின்றனர்: அவரின் சேவைகளினால் மேலும் நாம் உயர்வோமென எதிர்பார்த்திருந்த வேளை அவரின் மறைவு பேரதிர்ச்சியை எமக்குத் தருகின்றது. அவரின் சேவையை எமது பாடசாலை என்றைக்கும் மறவாது: அவரின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு 'எல்லாம் எப்போதோ முடிந்த காரியம் - துக்கிப்பதில் பயனில்லை' என ஆறுதல் கூறுவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டுமென இறைவனை வேண்டிக்கொள்கிறேன்:

திருமதி. ஞா. மகேந்திரராசா
உதவியாசிரியர் & பகுதித் தலைவர்
கிளி/பூநகரி மகா வித்தியாலயம்
பூநகரி.



- நண்பர்கள் -

-வெளியீடு சமர்

தொடர்பு:

" SAMAR "
SRI SELLATHURAI
2,RUE COUSTOU
75018 PARIS

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பத்மநாபா, உமாமகேஸ்வரன், சிறீ சபாரத்தினம் போன்ற காட்டிக் கொடுத்த தேசத்துரோகிகளின் கொலைக்காக கூச்சல் போட்டு ஒப்பாரி வைக்கின்றவர்களே, விமலேஸ்வரன் இவர்களில் ஒருவனல்ல ! உண்மையான தேசபக்தன் ! ஒருபுறத்தில் மக்கள் மீது அராஜகத்தின் கோரப்பற்களைப்பதித்துக் கொண்டு மறுபுறத்தில் ஜனநாயகத்திற்காக கூக்குரல் போட்டவனல்ல விமல் ! இறுதிவரைக்கும் ஜன நாயகத்திற்காக உணர்வு பூர்வமாகக் குரல் கொடுத்தவன்! எந்தப் பக்கத்திலிருந்து அடக்கு முறையும், அதிகாரத்துவமும் ஆட்சி செலுத் துகிறதோ, அந்தப் பக்கத்திற்கெல்லாம் ஆக்ரோஷமாக எதிர்க்குரல் எழுப்பியவன் அவன் !

சமர் -வெளியீடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்